# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை

**********************

## <u>இந்தியாவின் 74ஆவது குடியரசு தினக் கொண்டாட்டங்கள்</u>

இந்தியாவின் 74 ஆவது குடியரசு தினம் 2023 ஜனவரி 26 ஆம் திகதி இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் கொழும்பில் கொண்டாடப்பட்டது. உலகளவில் எழுதப்பட்ட மிகப்பெரிய அரசியலமைப்பான இந்திய அரசியலமைப்பு 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவந்தமை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும். இந்த அரசியலமைப்பின் முன்னுரையானது இந்தியாவை இறையாண்மை, சோசலிச, மதச்சார்பின்மை, ஜனநாயகம் மற்றும் குடியரசினைக் கொண்ட ஒரு நாடாக பிரகடனப்படுத்துகின்றது. உலகின் ஐந்தாவது பாரிய பொருளாதாரமாக 2022 செப்டம்பரில் இந்தியா வளர்ச்சிகண்டதன்பின்னர் கொண்டாடப்படும் முதலாவது குடியரசு தினக் கொண்டாட்டம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

2. உயிர்த் தியாகம் செய்த இந்திய அமைதி காக்கும் படையினருக்காக இந்திய அமைதி காக்கும் படையினரின் நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்கள், இந்திய உயர் ஸ்தானிகரின் வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் இந்திய தேசியக் கொடியினை ஏற்றி அணிவகுப்பு மரியாதையினையும் பார்வையிட்டார். அத்துடன், இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு இந்திய குடியரசுத் தலைவர் நிகழ்த்திய உரையின் சுருக்கமும் இச்சந்தர்ப்பத்தில் உயர் ஸ்தானிகரால் வாசிக்கப்பட்டதுடன் இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபயவர்த்தன அவர்களின் விசேட செய்தி ஒன்றும் காணொளி மூலமாக திரையிடப்பட்டிருந்தது.

3. இந்நிகழ்வில் இலங்கை கடற்படையின் இசைக்குழுவினர் பல்வேறு பாடல்களை இசைத்திருந்ததுடன் உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த கலாசார

நிகழ்ச்சிகளும் இடம்பெற்றிருந்தன. இந்நிகழ்வுகளில் பலநூற்றுக்கணக்கான இந்திய சமூகத்தினர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

4. இத்தினத்தை முன்னிட்டு இன்று மாலை இந்திய இல்லத்தில் வைபவ ரீதியான வரவை உபசார நிகழ்வு ஒன்றும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன் இந்நிகழ்வில் இலங்கையின் பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளும் பேராளர்களும் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

5. விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித் திட்டமொன்றுக்காக சர்வதேச நாணய நிதியத்திற்கான உத்தரவாதத்தை இருதரப்பு கடன்வழங்குனராக இந்தியா எழுத்துமூலமாக வழங்கிய இருவாரங்களின் பின்னர் இக்குடியரசு தினக்கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் கீழ் 2022 ஆம் ஆண்டில் இலங்கை மக்களுக்காக வழங்கப்பட்ட 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருளாதார, நிதி, மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான ஆதரவின் தொடர்ச்சியாக இந்த நிதி உத்தரவாதம் இந்தியாவால் வழங்கப்பட்டுள்ளது.

6. மேலும், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இருநாடுகளினதும் சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் நிறைவினை இவ்வருடம் குறிக்கும் நிலையில் அதற்குச் சமாந்தரமாக இவ்வருட குடியரசு தின நிகழ்வுகள் அமைந்துள்ளன. அதுமட்டுமல்லாமல் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையையும் நட்புறவைக்கொண்ட இவ்விரு அயல்நாடுகளாலும் இச்சந்தர்ப்பத்தில் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

7. யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல் காரியாலயங்கள் மற்றும் கண்டியில் உள்ள உதவி இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஆகியவையும் இந்தியாவின் 74 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு பல்வேறு விசேட நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

*************

**கொழும்பு**
**26 ஜனவரி 2023**